நல்லூர் இளை நூலகம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு          விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 176 ஆங்கீரச வைகாசி 08 ( 21 . 05 . 1992 ) வியாழன்


## யாழ். உ. அ. அ. பிரிவு விசேடகூட்டம் குறித்து செஞ்சிலுவை தலைமையகத்துடன் தொடர்பு

இம்மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச்சங்க விசேட கூட்டம் செல்லுபடியற்றது என இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக்கிளை அறிவித்துள்ளது தொடர்பாக கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச்சங்க தலைமையகத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்படவுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. சங்கத்தின் அமைப்புவிதி 6:2:5 இன்படியும், 6:7:1 இன் படியும் இவ்வாறு ஒரு கூட்டத்தை கூட்ட தலைவருக்கு பூரண உரிமையுண்டு எனவும் இதனைச் செல்லுபடியற்றதாக்க எவருக்கும் உரிமையில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. 25

# ராஜீவ் கொலைக் குற்றப்பத்திரிகை

## நீதிமன்றில் கடும் பாதுகாப்பு

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டும் குற்றப்பத்திரிகை நேற்று விசேட புலனாய்வுக் குழுவினரால் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

49 பக்கங்களையும் 400 பக்கங்களுக்கு பல்வேறு அனுபந்தங்களையும் கொண்ட இக்குற்றப்பத்திரிகையில் பிரதான தலைமறைவுக் குற்றவாளிகளாக பிரபாகரன், பொட்டம்மான், அகிலா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 41 குற்றவாளிகளில் 26 பேர் இலங்கைத் தமிழர்கள், 15 பேர் இந்தியர்கள், 12 பேர் உயிரிழந்து விட்டனர்.

வழக்கப்படியான குற்றம் வழக்கத்திற்கு மாறான முறையில் மேற்கொள்ளப்பட்டது என ராஜீவ் கொலை குறித்து அக்குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகையை விசேட புலனாய்வுப் பிரிவினர் தாக்கல் செய்யக் கொண்டு வந்த போது நீதிமன்ற வளாகம் முழுவதும் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

## வீரப்பன் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார்

தமிழக அமைச்சரவையிலிருந்து ஆர். எம். வீரப்பன் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆலோசனையின் பேரில் நீக்கப்பட்டுள்ளார்.

இவரின் பொறுப்பிலிருந்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மீன்பிடித்துறை அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழக அமைச்சரவையிலிருந்து ஜெயலலிதாவினால் நீக்கப்பட்ட மூன்றாவது அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எம். ஜி. ஆர் அமைச்சரவையில் வீரப்பன் சக்தி வாய்ந்த ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவி நீக்கப்பட்டது குறித்து கருத்துத் தெரிவித்த ஆர். எம். வீரப்பன் எல்லாம் நன்மைக்கே. தொடர்ந்தும் அ. தி. மு. க. விசுவாசியாகவே இருப்பேன் என்றாராம்.

## வற்றாப்பளை படுகொலை; இப்படி கூறினர் படையினர்!

முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோவில் இராணுவத்தினரின் ஷெல்லுக்கு 10 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதை கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு மூடிமறைக்க 'புதுக்கதை' ஒன்றை வெளியிட்டுள்ளது.

முல்லையின் மேற்குப்பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் காணப்பட்டது படையினர் ஷெல் தாக்குதல் நடத்தியதில் 9 பேர் பலியாகினர் 23 பேர் காயமடைந்தனர் ஏனைய தீவிரவாதிகள் தப்பியோடினர் எனக்கூறியுள்ளன பாதுகாப்பு வட்டாரங்கள்.

## வீரச்சாவு

முல்லைத்தீவைச் சேர்ந்த இம்மன் மேஜர் இளங்கோ (ஜெ. ஜெகதீஸ்வரன் கொக்குளாய்) வீரச்சாவு எய்தினார்.

மட்டக்களப்பு பாலம் போட்டமடுவில் நேற்று முன்தினம் இராணுவத்தினர், தேசவிரோதிகளுடனான மோதலில் ரவிச்சந்திரன் (த. இராஜகுமார் செங்கலடி) வீரச்சாவு எய்தினார்.

## வீரப்பனை கைது செய்ய முயன்ற 5 பொலிஸார் உயிரிழந்தனர்

தமிழகத்தின் பிரபல சந்தன மர கடத்தல் பேர்வழியான வீரப்பனைக் கைது செய்ய நேற்று எடுக்கப்பட்ட முயற்சியில் ஐந்து பொலிஸார் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கர்நாடக எல்லைப் பகுதிக் காடுகளில் வீரப்பனைத் தேடிச் சென்ற பொலிஸ் கோஷ்டியே வீரப்பனின் சகாக்களின் தாக்குதலுக்கு உள்ளானது. பொலிஸாரின் ஆயுதங்களையும் அக்கோஷ்டி எடுத்துச் சென்றுள்ளது.

### ★ கப்பலில் அனுப்புவதற்காக

## வெள்ளி மாலை 4 மணிக்கு முன் வெளியூர்த் தபால்கள் சேகரிப்பு

யாழ் பிரதம தபாலகத்திலிருந்து நாளை மறுதினம் சனிக்கிழமை காலை யாழ். குடாநாட்டுத் தபால் பொதிகள் கொழும்பு செல்லும் கப்பலில் அனுப்பி வைப்பதற்காக பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இதனால் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி வரை யாழ். பிரதம தபாலகத்துக்கு முன்பாகவும் உள்ளேயும் அமைந்துள்ள தபால் பெட்டிகளில் சேர்க்கப்படும் வெளியூர்த் தபால்களும் கப்பலுக்கு அனுப்பி வைக்கப்படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## யாழ். தொழில்நுட்பக்கல்லூரி பரீட்சை தடைப்பட்டது

உயர் கல்வி அமைச்சால் யாழ்தொழில் நுட்பக் கல்லூரி ஊடாக நெறிப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டு வரும் உயர் தேசிய வர்த்தகவியல் நிர்வாக நெறிக்கான பரீட்சை இடையில் தடைப்பட்டுள்ளது.

இம்மாதம் 18ஆம் திகதி திங்கள் ஆரம்பிக்கப்பட்ட இப்பரீட்சைக்கு இரண்டு பாடங்கள் மட்டும் நடத்தி முடிக்கப்பட்டு ஏனைய பாடங்களுக்கான வினாப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படாத நிலையில் பரீட்சை தடைப்பட்டுள்ளது.

இப் பரீட்சை தொடர்ச்சியாக தென்பகுதியில் நடைபெறுவதாகவும் தெரியவந்துள்ளது. 06

## குவைத் நிவாரணப்படிவங்கள் செயலகத்தில் வழங்கப்பட்டன

வளைகுடா யுத்தத்தினால் குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களுக்கான நிவாரண விண்ணப்பப் படிவங்கள் நேற்று யாழ் செயலகத்தில் விநியோகிக்கப்பட்டன.

ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பிய விண்ணப்பங்களில் பதிவு இலக்கங்கள் பெறாதவர்களுக்கே விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பெற்றுச் சென்றுள்ளதாகவும் எதிர்வரும் 6ஆம் திகதி மட்டும் இந்த படிவங்கள் விநியோகிக்கப்படுமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06-47

## தாய்லாந்து கலவரம்; படையினர் சுட்டு மேலும் பலர் பலி

தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வன்செயலையும் இரத்தக்களரியையும் பலஉலக நாடுகள் கண்டித்துள்ளன.

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை படையினர் அடக்கியபோது இரத்தக்களரி ஏற்பட்டது.

பாங்கொக் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரக்கணக்கானோர் மீது தாய்லாந்து படையினர் நேற்று முன்தினமிரவு சுட்ட போது பலர் கொல்லப்பட்டதாகவும், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரிட்டன் ஜேர்மனி, மலேசியா, யப்பான் ஆகியன இந்தச் சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ளன.

## ஸ்ரீ பெரம்புதூரில் பாதுகாப்பு உஷார்

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று ஸ்ரீபெரும்புதூரில் ...

இதன் முன்னேற்பாடாக தமிழக பொலிஸ் உயரதிகாரிகள் நேற்று ஸ்ரீபெரும்புதூர் ...

## வேலணைகல்வி அலுவலகம் ...

## பாதுகாப்பு உஷார்

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று ஸ்ரீபெரம்புதூருக்கு ஜெயலலிதாவும், நரசிம்மராவும் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முன்னேற்பாடாக தமிழக பொலிஸ் உயரதிகாரிகள் நேற்று ஸ்ரீபெரம்புதூருக்கு சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் அவதானித்தனர்.

நேற்று யாழ் செயலகத்தில் விநியோகிக்கப்பட்டன.

ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பிய விண்ணப்பங்களில் பதிவு இலக்கங்கள் பெறாதவர்களுக்கே விநியோகிக்கப்பட்டன.

நேற்று மட்டும் 600 பேர்

## யாழ். புதிய கல்விப் பணிப்பாளர் விடயத்தில் மத்திய - மாகாண அமைச்சில் இழுபறிநிலை

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளராக செல்வி இ. பெரியதம்பியே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பதவி ஏற்கவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் மூலம் தெரிவிக்கின்றன.

அறுபத்தோராவது வயதில் ஒப்பந்த ரீதியில் சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்த தற்போதைய கல்விப் பணிப்பாளருக்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சிபாரிசு செய்திருந்தும் வடக்கு கிழக்கு மாகாண உயர் மட்டம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி முடிவு தற்போது கல்வி அமைச்சைப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதியே எடுக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்விவகாரம் மாகாண கல்வி அமைச்சுக்கும் மத்திய கல்வி அமைச்சுக்கும் இடையிலுள்ள அதிகாரம் பற்றிய ஒரு இழுபறி நிலையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (06, 86, 47)

...ரிகள் தெரிவித்தன. 06.47

## வேலணைகல்விஅலுவலகம் உடைக்கப்பட்ட நிலை

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வேலணை கோட்டக் கல்வி அலுவலகம் உடைக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் ஆவணங்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை எனவும் தீவக கல்வி இணைப்பு அதிகாரியாக அரசினால் நியமிக்கப்பட்ட இரா. இன்னத்தம்பி கல்வி அமைச்சுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இக்கட்டடத்தில் கல்வி அலுவலகத்தை நடத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தீவகத்துக்கான கல்வி இணைப்பு அலுவலகம் நெடுந்தீவிலேயே இயங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 15

...ம் செய்த அகதிகளை

மார்க், பிரிட்டன் ஜேர்மனி, மலேசியா, யப்பான் ஆகியன இந்தச் சம்பவம் குறித்துக் கவலை தெரிவித்துள்ளன.

அமெரிக்கா தாய்லாந்தின் கூட்டு இராணுவப் பயிற்சியில் அமெரிக்கப் படைகள் பங்கு பற்றுவதை இடைநிறுத்தியுள்ளது.

## வடகிழக்கு அரச அதிபர்களுக்கு 26இல் கொழும்பில் கூட்டம்

உணவு, புனர்வாழ்வு, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற அமைச்சுக்களின் வடக்கு கிழக்கு சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று இம்மாதம் 26ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு யாழ். அரச அதிபரும் அழைக்கப்பட்டிருக்கிறார் என யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை இவ் அமைச்சுக்களின் உயரதிகாரிகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலைக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 47

★ இந்திய இணை அமைச்சர் ஜேக்கப் அறிவிப்பு

# விடுதலைப்புலிகளை தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் ஆதரிக்கிறார்கள் !

விடுதலைப் புலிகள் இயக்கத்தினையும் அதன் நடவடிக்கைகளையும் தற்போது தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகளில் பெரும்பாலானோர் ஆதரிப்பதாக இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம் எம் ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதனால் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளைக் கண்காணிக்க வேண்டியுள்ளதாகவும் ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்தும் தகவல் தெரிவிக்கையில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவி செய்யும் அமைப்புகளும் தடைக்கு உள்ளாகும் என்றும், இத்தகைய அமைப்புக்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அமைச்சர் ஜேக்கப் அறிவித்தார்.

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் புதிய வைத்திய பீடம்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் புதிதாக வைத்திய போதனா பீடமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகளுக்கென்று 11 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

புதிய வைத்திய போதனா பீடத்தில் வைத்தியர்கள் தாதிமார், மருந்தாளர்கள், சுகாதாரத்துறை நிர்வாகிகள் ஆகியோர் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

அடுத்த ஆண்டு இப் போதனா பீடத்தில் விரிவுரைகள் ஆரம்பமாகும். ஆரம்பத்தில் 250 பேர் இங்கு பயிற்சிக்கு சேர்க்கப்படுவர்.

## ஐந்து சிங்களவர்கள் அம்பாறையில் சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டத்திலுள்ள மாஓயாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இனந்தெரியாத ஆயுதக் கோஷ்டியால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் நடந்துள்ளது.

இவர்கள் கொக்கல பௌத்த ஆலயத்தில் வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்டுவிட்டு திரும்புகையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரமுனைத் தமிழர்கள் மீது அதிரடிப்படை துன்புறுத்தல்

வீரமுனையில் மீளக்குடியேறிய தமிழர்கள் மத்தியில் பதற்றம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு மீளக் குடியமர்த்தப்பட்ட அகதிகளில் சிலர் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஒரு சாராரின் விஷமத்தன முயற்சியால் இவ்விதத் துன்புறுத்தல்கள் தொடர்வதாகவும் மேலும் அறியவருகிறது.

## நாட்டின் காட்டு வளம் 20 சதவீதமாகக் குறைந்தது

நாட்டின் காட்டு வளம் ஆண்டுதோறும் 42 ஆயிரம் ஹெக்டேயர் வீதம் குறைவடைந்து வருவதாக மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.

"1961 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 40 சதவீதம் காடுகளாகக் காணப்பட்டன. ஆனால் தற்போது இந்த அளவு 20 சதவீதமாகக் குறைந்து விட்டது. இதனால் நாடு பாரதூரமான விளைவை எதிர்நோக்குகிறது" எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்படுவோர் விவரம்

பொன்மலை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் மீது முதலாவது குற்றவாளியாகக் குற்றம் சுமத்தப்படவுள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த வழக்கில் இரண்டாவது குற்றவாளியாக பொட்டு அம்மான் மீது குற்றம் சுமத்தப்படும்.

இவர்களுடன் மேலும் 21 பேரின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மொட்டை முருகன், பாக்கியநாதன், பத்மா, நளினி, சங்கர், ரொபேர்ட் பியூஸ், பேரறிவாளன், ஏ. குமார், சுபா சுந்தரம், கனகசபாபதி, ஆதிரை, விஜயன், பாஸ்கரன், சின்னச் சாந்தன், ரங்கநாதன், இரும்பொறை, தனசேகரன், ரவிச்சந்திரன், மகேஷ், ரங்கன் என அழைக்கப்படும் ராஜசூரியர், விஜி என அழைக்கப்படும் விக்னேஸ்வரன் ஆகியோரே குற்றவாளிகளாக குற்றப்பத்திரிகையில் இடம் பெற்றுள்ள ஏனையோர் என இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மேற்கு பருவப் பெயர்ச்சிமழை இன்றுவரை தொடரும்

தற்பொழுது பெய்து வரும் மழை இன்றுவரை தொடருமென கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து நாட்டின் தென்மேற்கு கரையோரப் பகுதிகளில் பெருமழை பெய்து வருகிறது. இடைநாட்டில் காற்றுடன் கூடிய தூறல் மழை பெய்து வருகிறது.

கடந்த சனியன்று இந்த தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை தீவிரமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அரச வர்த்தக வங்கிகளுக்கு சுய ஆதிக்க உரிமை

இலங்கை வங்கியையும், மக்கள் வங்கியையும் சர்வதேச தரத்திற்கு கொண்டுவருவதற்காக இவ் வங்கிகளுக்கு சுய ஆதிக்க உரிமைகள் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன்பொருட்டு இவ்விரு வங்கிகளையும் மீளமைப்பது பற்றிய அரசின் முடிவு நிதியமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

## திலகரின் அறிவிப்பு அரசசார்பு பத்திரிகையில்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்திருப்பது இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதைத் தடுக்கும் நோக்கமுடையது என விடுதலைப்புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் பாரிஸில் அறிவித்துள்ளதை நேற்று வெளியான அரசசார்புப் பத்திரிகையான 'தினகரன்' முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்துள்ளது.

"பல மேற்கு நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்துள்ளன. ஆனால் இந்தியாவின் போக்கு வேறாக உள்ளது. இவ்விடயத்தில் தான் மட்டுமே அதிகாரம் செலுத்துவதற்காக இந்தியா தன் பலத்தை பிரயோகிக்க முயல்கிறது" என திலகரின் அறிவிப்பை முழுமையாக வெளியிட்டுள்ளது அப் பத்திரிகை.

## 'பிறண்டி'க் கடைக்குப்போட்டி

தமிழ் நாடு முழுவதும் "பிறண்டி"க் கடைகளுக்கு மிக விறுவிறுப்பாக ஏலம் நடந்ததாகவும் பல இடங்களில் ஏலம் எடுக்க பலத்த போட்டி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் திருவிழாக் கூட்டம்போல கூடி லட்சக்கணக்கான ரூபா கொடுத்து போட்டி போட்டு ஏலம் எடுத்ததாகவும் "தினத்தந்தி" செய்தி வெளியிட்டுள்ளது.


வரையறுக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்

பதிவு இல. 83/4-04-1936

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1992ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (14-06 92) காலை 9-30 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வேண்டுகின்றோம். 31-05-92க்கு முன் காரியாலயத்தில் கிடைக்கும் பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டு பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. கூட்ட அறிவித்தல் வாசித்தல்
3. தலைவர் உரை
4. சென்ற வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கை
5. எண்பார்வை அறிக்கை (1990-1991)
6. மொத்தக் கடன் எல்லை ரூபா. 500000/- அங்கீகாரம்
7. தேனீர்ச் சாலை



இலங்கை மத்திய வங்கி

## அறிவித்தல்

ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் அதிகாரத்துக்குட்பட்டது)

இலங்கை மத்திய வங்கியானது 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக ஹோம் பினான்ஸ் லிமிட்டட் இன் வைப்பாளர் தொடர்பான நிவாரணக் கொடுப்பனவு வேலைகளை முடிவுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது. சில வைப்பாளர்கள் தம்மால் அனுப்பப்பட்ட நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங்கள் தொடர்பாக சம்பவிக்கு அவர்களால்

7. தேனீர்ச் சாலை

8 பிரேரணைகள்

9. புதிய அங்கத்தவர் அங்கீகாரம்

10. பணிப்பாளர் சபை வெற்றிடங்கள் தெரிவு :-
சித்தங்கேணி -1, சுழிபுரம் -1, சங்கானை கிழக்கு மாதகல் -2, தொல்புரம் -1, மூளாய் -1.

11. இறைவணக்கம்

குறிப்பு :- எண்பார்வை அறிக்கை (1990 - 1991) காரியாலயத்தில் பார்வையிடலாம்.

நா. வேலுப்பிள்ளை,
செயலாளர்.

18. 05. 1992.

05036

மொட்டை முருகன், பாக் இன்னது.

# மொழி அமுலாக்கலுக்கு 3 கோடி ரூபா தேவை

அரச கரும மொழிக் கொள்கையை அமுல்நடத்துவதற்கு அரசுக்கு இரண்டு கோடி 86 இலட்சத்து 27 ஆயிரத்து 100 ரூபா தேவைப்படுகிறதாம்.

இத் தொகையை ஒதுக்கக் கோரும் குறை நிரப்புப் பிரேரணை ஒன்று நேற்று முன்தினம் பொது நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## நல்லூர் வாசி கொழும்பில் கைது

பொலிஸ் விசேட பிரிவினரால் கொழும்பு புறக்கோட்டை மல்வத்த வீதியில் வைத்து நல்லூர் வாசி ஒருவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் தொடர்பாக கம்பனிக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட விலாசங்களின் படி அனுப்பப்பட்ட கடிதங்களுக்கும் பதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அவதானித்துள்ளோம். இதுவரை முதலாவது பகுதிக் கொடுப்பனவு பெறாத எல்லா வைப்பாளர்களும் உடனடியாகக் கம்பனியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கம்பனியின் விலாசம் கீழ் வருமாறு.

Home Finance Ltd.,
463, Galle Road,
Colombo - 3.

இயக்குனர்,
வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

05037

## காய்கறி உருவத்தை ஒத்த நம் உடம்பின் உறுப்புகள்

நம் உடம்பில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் காய்கறிகளின் உருவத்தை ஒத்திருக்கின்றன. அவ்வுருவத்திற்கு ஒத்த காய்கறிகளைச் சாப்பிட்டுவந்தால் அந்தந்த உறுப்புகள் வளர்ச்சி பெறும் என்று சித்த மருத்துவ ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூளையைப் பாருங்கள். அது முட்டைக்கோஸ் வடிவத்தில் இருக்கிறது. காலிஃப்ளவர் மாதிரித்தோன்றுகிறது. இந்த இரண்டையும் சாப்பிட்டால் மூளை வளரும்.

பற்கள் மாதுளம் பழம்போல் இருக்கிறது. மாதுளம் பழம் சாப்பிடுங்கள் பற்கள் வளர்ச்சியும் வலுவும் பெறும்.

இது போல் கண் விழி-உருளைக்கிழங்கு, பசு நெல்லி, தக்காளி சாப்பிடுங்கள்.

இருதயம்-ஆப்பிள், மாம்பழம், கொய்யா, வெங்காயம், பீற்றூட் சாப்பிடுங்கள்.

இரைப்பை-சுரக்காய். மார்பகம்-இளநீர் குண்டிக்காய். குடல்-புடலங்காய், ஆண்மிந்து-ஆலம் விதை, அரசு விதை சாப்பிடுங்கள். (16)

## சுவிஸிலிருந்து கனடா செல்ல கிட்டு முயற்சியாம்

சுவிட்சர்லாந்திலிருந்து கனடா செல்ல கிட்டு முயற்சி செய்வதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக கனடாவிலுள்ள இலங்கைத் தூதுவராலயம் கனடா குடிவரவு அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கி அவர்களை உஷார் படுத்தியுள்ளதாகவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

## பல மொழிகளில் தேர்ச்சியுள்ள ஊழியர்க்கு சம்பள உயர்வு

பொது நிர்வாக சுற்றறிக்கைகள் 38/89 (1), 38, 89 (11) இன்படி தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சிறப்புத்தராதரம் உடைய பொதுச்சேவை உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களுக்கு அவர்கள் அறிந்துள்ள மொழியின் படி சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு சகல கல்விப்பணிப்பாளர்களையும் கோரியுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக இவ்வாறு தகுதியுடையவர்களின் பெயர் வேலை செய்யும் இடம் தகுதியுடைய மொழிகள் அவர்களுக்கு இதன் பொருட்டு கொடுபட வேண்டிய சம்பள உயர்ச்சி நிலுவைகள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. 15

## அரச ஊழியர்களுக்கு 60 மாத சம்பள முற்பணம்

அரசாங்க ஊழியர்கள் வீடு அல்லது வாகனம் வாங்க 60 மாத சம்பள முற்பணம் வழங்கப்படவுள்ளது.

முன்னர் மேற்படி தேவைகளுக்காக அரச ஊழியர்களுக்கு 24 மாத சம்பள முற்பணம் மட்டுமே வழங்கப்பட்டது.

பிரதமர் டி.பி.விஜயதுங்க இத்தகவலை நேற்றுத் தெரிவித்துள்ளார்.

## கனடாவுக்குள் தமிழர்கள் புக உதவுபவர் தேடப்படுகிறார்

ஐரோப்பாவிலிருந்து கனடாவுக்கு தமிழர்களை சட்டவிரோதமாக அழைத்துச் செல்லும் பெரிய கடத்தல் கோஷ்டியொன்று பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

இக் கோஷ்டியின் தலைவரெனக் கருதப்படும் ரொறன்ரோவைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்வதற்கு சர்வதேச ரீதியில் தேடுதல் நடத்தப்படுகிறதாம்.

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்கள் பின்னர் இந்த கோஷ்டியின் வழிநடத்தலினால் பிற நாடுகளுக்கு சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்பட்டு குடியேற்றப்படுகின்றனராம்.

## தமிழ் மொழித்தின போட்டி மட்டக்களப்பில் நடைபெறும்

வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின போட்டிகள் ஆனிமாதம் நடைபெற உள்ளது.

இப்போட்டி மட்டக்களப்பில் நடைபெற உள்ளது. 15

### ★ பாராளுமன்றத்தில் தினேஷ்

# பொருளாதார நெருக்கடியில் அரசு சிக்கித் தவிக்கிறது!

அரசு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. எந்தளவு உயர்ந்த வட்டிக்கும் கடன் வாங்க உலக வர்த்தக வங்கிகளை அரசு நாடியுள்ளது என ம. ஐ. மு. தலைவர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

"அரசுக்கு சொந்தமாக உள்ள ரூபவாஹினி கூட்டுத் தாபனம், ஐ.ரி.என். ஆகியவற்றையும் அழித்துவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மகாராஜா நிறுவனத்துக்குத் தனிபொரு ரூபவாஹினியை நடத்த அரசு இடம் அளித்துள்ளது. இதற்கென மகாராஜா நிறுவனம் தனியான ஆன்ரெனாக்களை சுங்க வரியின்றி இறக்குமதி செய்து விற்பனைக்கு விட்டுள்ளது".

"ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம் ஒரு வருடத்துக்குள் அழிந்துவிடும் ரூபவாஹினிக்கு வரும் விளம்பரங்களை இனி மேல் திசை மாறிப் போகும் தேசிய ரூபவாஹினியை மரணிக்கச் செய்யவே மகாராஜா ரூபவாஹினி உதவும்"

"இலங்கையில் உள்ள மகாராஜா, இந்தியாவில் உள்ள மகாராஜா ஆகியோர் ஒன்றிணைந்து மலையகத் தோட்டங்களை நிருவகிக்கப்போகிறார்கள்."

"நாட்டின் வருமானத்தைப் பெருக்கவல்ல இலாமத் செய்யவே தற்போது நடவடிக்கையெடுக்கப் படுகிறது" ஒருசிலரே இந்த நாட்டில் இலாபம் பெறுகிறார்கள். மகாராஜா, ஜோர்ஜ்கீல்ஸ் மற்றும் நிறுவனங்களுக்கே வசதிகளும் வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன.

"பொருளாதார நெருக்கடியில் அரசு மூழ்கியுள்ளது எவ்வளவு உயர்ந்த வட்டிக்கும் கடன் பெற அரசு முற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் அரசு எதிர்பார்த்தளவில் வந்து சேரவில்லை. எனவே உலக வர்த்தக வங்கிகளிடமிருந்து வட்டிக்கு கடன் பெறுவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

### ● 'இந்தியா டுடே' தரும் தகவல்

## இந்திய புலனாய்வுப் பிரிவே சிவராசனுக்கு பயிற்சி வழங்கியது

ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவரென இந்திய அரசால் குற்றம் சாட்டப்பட்ட சிவராசன் இந்திய புலனாய்வு ஏஜென்ஸியினால் முன்னர் பயிற்சியளிக்கப்பட்டவர் என பிரபல அரசியல் சஞ்சிகையான 'இந்தியா டுடே' தெரிவித்துள்ளது.

'1983 இல் இலங்கைப் பிரச்சினையில் இந்திய கருணை கொண்டிருந்த போது சிவராசன் இந்தியாவில், இந்திய புலனாய்வுப் பிரிவிடம் ஆயுதப் பயிற்சி பெற்றார். அவருக்கு குண்டு வெடிமருந்து பற்றிய அறிவு இந்திய புலனாய்வுப் பிரிவினால் புகட்டப்பட்டது. தொலைத்தொடர்பு பயிற்சியும் அவர் பெற்றார். அன்னையில் யுத்தம்செய்யும் பயிற்சியும் தமிழ்நாடு முகாமில் இவருக்கு வழங்கப்பட்டது' என இந்தியா டுடே எழுதியுள்ளது.

## கே.ஜே.ஜேசுதாசுக்கு 'ஆஸ்தானகாயகன்' விருது

பிரபல பின்னணிப் பாடகர் கே.ஜே. ஜேசுதாசுக்கு கேரள அரசு 'ஆஸ்தான காயகன்' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவ்விருதுடன் ஜேசுதாசுக்கு நான்கு இலட்சம் ரூபா ரொக்கப்பணம், ஒரு தங்கப்பதக்கம், சான்றுப் பத்திரம் என்பனவும் கேரள அரசினால் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கே.ஜே. ஜேசுதாசுக்கு ஒரு சட்டசபை அங்கத்தவரின் அந்தஸ்தையும் வழங்கியுள்ள கேரள அரசு அவரது ஆயுட்காலம் முழுவதும் வருடம்தோறும் 1[illegible] ஆயிரம் ரூபாவை சன்மானமாக வழங்கவும் முன்வந்துள்ளது.

## அணிகளின் புள்ளி விவரம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற கால் இறுதிப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் சம்பியன்களாக வந்த ஆறு அணிகள் கலந்து கொண்டன. அவை ஒவ்வொன்றும் 5 ஆட்டங்களில் கலந்து கொண்டு பெற்ற பெறுபேறுகள் வருமாறு.

குருநகர் பாடுமீன் 5 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 10 புள்ளிகளைப் பெற்றுள்ளது பாஷையூர் சென் அந்தனீஸ் அணி 3 ஆட்டங்களில் வெற்றியும் ஒரு ஆட்டத்தில் சமமும் அடைந்து 7 புள்ளிகளையும், கெந்தா 3 ஆட்டங்களில் வெற்றி பெற்று 6 புள்ளிகளையும், கிளாபர் அணி 2 ஆட்டங்களில் வெற்றியும் ஒன்றில் சமமும் அடைந்து 5 புள்ளிகளையும், இவானந்தா அணி ஒரு ஆட்டத்தில் மாத்திரம் வெற்றி பெற்று 2 புள்ளிகளையும் பெற்றுள்ளன. 16

## பொதுக் கூட்டம்

யாழ். வர்த்தகர்சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மாவட்ட மெய்வல்லுநர் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கோட்டரீதியாக நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற போட்டியாளர்களும், அணிகளும் கலந்து கொள்ளும் மாவட்ட மெய்வல்லுநர் போட்டி 08. 6. 92 தொடக்கம் 9. 6. 92 வரை (இருதினங்களும்) யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா அறிவித்துள்ளார்.

இப் போட்டி 15, 17, 19 வயதினர்க்கு மட்டத்தில் ஆண் பெண் இருபாலருக்கும் நடாத்தப் படஉள்ளது. 15

## சீவல் தொழில் ஊதியமாக மாதம் 35 ஆயிரம் ரூபா!

கிளிநொச்சியைச் சேர்ந்த சீவல் தொழிலாளி ஒருவர் 35 ஆயிரம் ரூபாவை மாத வருமானமாகப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

புளியம் பொக்கணையைச் சேர்ந்த நாகுலேஸ்வரன் என்ற இந்த சீவல் தொழிலாளி கடந்த மார்ச் மாதத்துக்குரிய தனது சீவல் தொழில் உற்பத்தி ஊதியமாக 35004 ரூபாவை கிளிநொச்சி தென்னை பனம் பொருள் உற்பத்திச் சங்கத்திடமிருந்து பெற்றுள்ளார்.

இந்த அதிகரித்த மாதாந்த உற்பத்தி ஊதியம் தமிழீழத்திலேயே சாதனையாகக் கருதப்படுகின்றது.

அதே இடத்தைச்சேர்ந்த மு. இராசையா என்ற சீவல் தொழிலாளி 33376 ரூபாவையும், பரந்தனைச் சேர்ந்த க. யோகசாமி என்ற தொழிலாளி 26400 ரூபாவையும் கிளிநொச்சி எட்டாம் வாய்க்காலைச் சேர்ந்த வை. அந்தோனி பிள்ளை 21231 ரூபாவையும் அதே மாதம் சீவல் தொழில் ஊதியமாக மேற்படி சங்கத்திடமிருந்து பெற்றுள்ளனர்.

